**நாவுல பிரதேச சபை - 2022**

------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நாவுல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாவுல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை- |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் போது 04 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 43,759 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 இன் நிதிக்கூற்றுகளில் தயாரிக்கும் போது நாட்குறிப்பு மூலம் சீராக்குவதாக | செலவினம் இனங் காணப்பட்டு கணக்கு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டின் போது 04 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 97,689 மீனாய்வாண்டின் செலவினம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 இன் நிதிக்கூற்றுகளில் தயாரிக்கும் போது நாட்குறிப்பு மூலம் சீராக்குவதாக | - மேற்படி - |
| (இ) | உட அஸ்வதும வீதியின் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் பட்டியல் பெறுமதியின் பிரகாரம் ரூபா 227,968 ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய போதிலும் அது ரூபா 250,286 என கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் 22,318 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | எதிர்வரும் காலங்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய செலவினங்கள் இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட 5 கணக்கு விடயங்களுக்குரிய அட்டவணைகளில் காணப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 1,164,020 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2023 இன் நிதிக் கூற்றுகளில் தயாரிக்கும் போது நாட்குறிப்பு மூலம் சீராக்குவதாக | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்
**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு | 2011 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடொன்று ˙மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. . | புதிய வீதவரி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை அத்துடன் எதிர்காலத்தில் புதிய மதிப்பீடொன்று செய்வதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 யூலை 08 ஆந் திகதிய 2235/5 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 83(1) ஆம் பிரிவு | இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் குடியிருப்பிற்காக பயன்படுத்தப்பட்ட 20 தரப்பினரிடமிருந்து குடியிருப்பு காலத்திற்காக நாளொன்றுக்கு ரூபா 100 வீதம் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குடியிருக்கும் திகதி முதல் கட்டணம் செலுத்தி இணக்க சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (இ) | விதி<br>1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 61 | அனுமதிபத்திர கணிப்பீடொன்றை மேற்கொண்டு அக்கணிப்பீட்டு அறிக்கையின் தகவல்களின் பிரகாரம் | கணிப்பீட்டு அறிக்கையின் தகவல்களின் பிரகாரம் பீ எஸ் 26 படிவத்தின் படி அவலப்படுத்துவதற்கு | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பி.எஸ் 26 ஏ மாதிரி படிவத்தில் பதிவேடுகளில் பதிவு செய்யப்படாமல் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் பட்டியல்களை பதிவேடுகளுக்கு உட்படும் முறையற்ற நடைமுறை ஒன்று பின்பற்றப்பட்டு இருந்தது. | இருப்பதாக | |
| (ஈ) சுற்றறிக்கை 2014 மார்ச் 20 ஆந் திகதிய 2014/02 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை 3 ஆம் பந்தி | மொத்த மீண்டும் செலவினத்தில் 50 சதவீதம் ஒழுங்கைகள் கட்டிடங்கள் நிலையான சொத்துக்கள் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பிற்காக செலுத்த வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் அதற்காக மீண்டெழும் செலவினத்தில் 35 சதவீதத்தை விட குறைந்த அளவொன்று அதாவது ரூபா 9,043,500 தொகை பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்தது. | ஒழுங்கைகள் கட்டிடங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் திருத்தங்களுக்காகவும் பராமரிப்புக்காகவும் கருத்தில் கூடிய சதவீதம் ஒன்று ஒதுக்கீடு செய்யப்பட்டதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,695,089 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,177,734 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட

வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,697,527 | 1,638,913 | 1,695,172 | 2,229,307 | 1,631,550 | 1,535,232 | 1,494,330 | 2,285,566 |
| (ii) | வாடகை | 2,714,200 | 2,161,930 | 2,266,710 | 775,155 | 3,819,000 | 2,206,768 | 1,970,563 | 879,935 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,770,000 | 1,461,000 | 1,461,000 | - | 1,495,200 | 1,436,085 | 1,436,085 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 17,613,000 | 834,429 | 9,698,851 | 6,665,914 | 13,895,500 | 14,376,380 | 11,394,789 | 8,541,150 |
| | | **23,794,727** | **6,096,272** | **15,121,733** | 9,670,376 | 20,841,250 | 19,554,465 | 16,295,767 | 11,706,651 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒரு அலகிலிருந்து நிலுவை வீதவரி மீதி ரூபா 5,000 ஐ மிகைத்த 73 வீதவரி அலகுகளில் இருந்து 01 முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்படாமல் காணப்படும் நிலுவை வீதவரி ரூபா 677,683 ஆக இருந்தது. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| வாரச் சந்தை 10 ஆம் இலக்க கடையாக பெயரிடப்பட்டிருந்த நாவுல பிரதேச செயலாளருக்குரிய பழைய அரச இல்லம் ஒன்று ரூபா 1,000 படி மாதாந்த வாடகை அடிப்படையில் 2009 மார்ச் 17 ஆம் திகதி உடன்படிக்கை செய்து சபையால் விழித்தரப்பினருக்கு குடியிருப்புக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 82,840 ஆக இருந்தது<br>உரித்தினை சீராாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரித்தை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | உரித்தை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள எடுத்தல் வேண்டும் |

**(இ) நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்**

| | | |
|---|---|---|
| மத்திய மாகாண பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 497,980 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,644,000 ஆக இருந்தது. | முத்திரைக் கட்டணங்கள் மற்றம் தண்டப்பணத்திற்குரிய அட்டவணைகள் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 1,913,467 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய வருமானத்தை அறவிடல் வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,590,626 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2016 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1955/7 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமான பத்திரத்தில் வெளியிடப்பட்ட 1952 இன் 06 இம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட உப உறுப்புறை) சட்டத்தின் முச்சக்கர வண்டி நிறுத்தி வைப்பது தொடர்பான உப உறுப்புரையின் 4(1) பிரிவின் பிரகாரம் சபை பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்க வேண்டிய இடங்கள் மற்றும் ஒவ்வொரு இடத்திலும் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டி எண்ணிக்கை அடிப்படையில் சபை மூலம் | வீதிகளை ஒதுக்குவதில் சிக்கல்கள் காணப்படுவதால் வர்த்தமானில் வெளியிடப் படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானிக்கப்பட்டு அது வர்த்தமான பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) | மத்திய சந்தையில் 13 கடைகள் உடன்படிக்கை செய்யப்படாமல் வியாபார நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்டிருந்தன | தொற்று நிலைமை மற்றும் நாட்டில் உருவாகிய பொருளாதார பிரச்சினை காரணமாக இக்கடைகள் முடி இருந்ததாக | முறையாக உடன்படிக்கை செய்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.2 நோக்கங்களை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குத்தகைக்கு பெற்றுக்கொண்ட கடைகளை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமல் மூடி வைக்க முடியாத போதிலும் குத்தகைக்கு பெற்றுக் கொண்ட குத்தகையாளர்களால் 04 கடைகளை மூடி வைத்திருந்தனர். | கடை வாடகை கொடுப்பனவு தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதால் கடைகள் தொடர்பாக மீண்டும் கணிப்பீடு செய்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | பெற்றுக் கொண்ட கடைகளை வியாபார நடவடிக்கை ஈடுபடுத்த வேண்டும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| | - | |
| ரூபா 199,000,000 ஆன 17 காணிகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை | உறுதி, கட்டளை கையளிப்பு என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு நவடிக்கை எடுப்பதாக | காணிகளின் உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3.2 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 43,453,000 ஆன காணிகள் மற்றுமட19 கட்டிடங்கள் 1 ஆண்டு முதல் 16 ஆண்டுகள் வரையார காலத்தில் விளைவற்று காணப்பட்டன. | பொது நடவடிக்கைகளுக்காக தேவைப்பாட்டின் பிரகாரம் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காணி பயன்படுத்தப்பட வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும் பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் காண்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 11 வருமான விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 36 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலும் 29 செலவின விடயங்களின் தேறிய ஏற்பாடுகளில் 38 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதுடன் 35 செலவின விடயங்களின் ரூபா 85,727,500 கூட்டுத்தொகையான முழு நிதிஏற்பாடும் செலவிடப்படாமல் எஞ்சியிருந்தன. | எதிர்காலங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கவனமாகவும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீட்டில் ஒதுக்கீடு வேண்டும். |